
# ஞாலமெலாம் விளங்குக நற்பெரியார் பிறந்தநாள்!



பெரியார்போல் இங்கொரு
பெரும்புரட்சியாளரைச்
சரித்திரம் கண்டதில்லை!
தன்மானம் பகுத்தறிவு
உரியவை மக்கட்கென்று
ஒருவரும் விண்டதில்லை
சரியென்றால் சாற்றஅவர்
தயக்கமும் கொண்டதில்லை
நெரித்திடும் சனாதன
நெடுங்காலக் குப்பையை
எரித்திடும் தீயாக
இறுதிவரை ஒளிர்ந்தவர்!
பொரிகிளப்பிச் சமுதாயப்
புரட்சியில் கிளர்ந்தவர்!
உரிமையாம் விடுதலை
உணர்ச்சியில்
வளர்ந்தவர்!
புரிநூலார் நடுங்கிடப்
புயலாகக் கிளர்ந்தவர்! கரித்தாலும்
தம்கருத்தைக் கலங்காமல்
உரைத்தவர்!
பிரித்தாளும் நால்வருணப்
பித்தலாட்டம் ஒழித்தவர்!

மரியாதை வேண்டுமென
மக்களுக்கு உணர்த்தியவர்;
சரிநிகர் சமமெனச்
சாதித்துக் காட்டியவர்;
உரித்தவெங் காயத்தில்
ஒன்றுமே இலாததுபோல்
அரிசிவன் கதைகளால்
ஆவதுதான் எதுவுமில்லை;
புரிநூலார் உருப்படிகள்
புரட்டுகள்; திருட்டுகள்
நரியாளர் தந்திரங்கள்;
நாஉறும் மந்திரங்கள்;
பெரிதாகக் கடவுளெனும்
பித்தலாட்டப் பேச்சுகள்;
வரிவரியாய்ப் பார்த்தாலும்
வடித்துவைத்த பொய்களெனப்
புரிந்துகொண்ட பெரியார்தாம்
புரட்சிப்பண் மீட்டுகின்றார்!

சாதிகள் ஆரியச்
சதிகளாம் விதிகளாம்
நீதியிலாச் சேதிகளாம்
நெடுங்கொடுமைச்
சூதுகளாம்
ஆதியிலே இல்லாத
ஆரியர்செய் தீதுகளாம்
ஊதியே பெரிதாக்கி
உலவவிட்ட ஏதுங்கள்
வேதியர் சூழ்ச்சியென
விளக்கிய பெரியாரே
நாதியிலா மக்கட்கு
நம்பிக்கை நாயகராம்!

கடவுளரும் மதங்களும்
கட்டாயம் மனிதர்கள்
தொடக்கூடா தெனப்பெரியார்
சொன்னதனால் அல்லவோ
மடத்தனங்கள் குறைந்தன;
மாயைகள் அகன்றன!
இடர்நீக்கக் கடவுள்தான்
இங்கெழுந்து வருவாரென்று
அடர்பொய்கள் மெல்லமெல்ல
அகம்விட்டுப் போயின!

உடலுழைப்பும் அறிவாய்வும்
உண்டானால் மட்டுமே
கடமைகள் நிறைவேறும்;
கடுந்துயர்கள் கரைந்தோடும்;
உடைமைகள் உருவாகும்;
உள்ளந்தான் திருவாகும்!
புடம்போட்ட தங்கமாம்
புரட்சியாளர் பெரியார்தாம்
வடம்போட்டுத் தடம்போட்டு
வலியவே இழுத்ததனால்
அடம்போட்ட அறியாமை
அற்றுத்தான் விழுந்தது!

பார்ப்பனம் என்னுமொரு
படுநஞ்சு பரவியதால்
சீர்கெட்டுச் சமுதாயம்
சிதைந்தது; மேலுமதன்
ஆர்ப்பாட்டம் மிகுந்ததால்
அறிவுமானம் அகன்றன!
தீர்ப்புரைத்துப் பெரியார்தாம்
தீயாக எழுந்ததனால்
போர்ப்பறை கொட்டியதால்
புரட்சித்தீ கொளுத்தியதால்
வேர்கெட்டுச் சனாதனம்
விழுதுடன் வீழ்ந்தது!
நார்நாராய்க் கிழிந்தது;
நச்சுலா ஒழிந்தது!

**பேராசிரியர்
மா.செல்வராசன்**

யார்கெட்டுப் போனால்தான்
எமக்கென்ன என்றிராமல்
ஊர்விட்டு ஊர்ஊராய்
ஒவ்வொரு நாள்நாளாய்ச்
சீர்திருத்தம் பேசியே
சிந்திக்கத் தூண்டினார்!
பார்போற்றும் பெரியார்தாம்
பகுத்தறிவு தன்மானம்
நேர்கொள்ள வேண்டுமென
நெஞ்சுறைக்க நிகழ்த்தினார்!

பெரியாரின் எழுச்சிக்குப்
பின்னர்தான் நாட்டிலே
பரிதாப நிலையிலே
பள்ளத்தில் உழன்றவர்கள்
உரிமையை இழந்தவர்கள்
ஒடுங்கியே கிடந்தவர்கள்
மரியாதை அழிந்தவர்கள்
மாக்களாய் நடந்தவர்கள்
சரிநிகர் மறந்தவர்கள்
தாழ்ந்துபணிந் திருந்தவர்கள்
நரிகளைத் தொழுதவர்கள்
நாளெல்லாம் அழுதவர்கள்

வரிப்புலியாய்ப் பாய்ந்தனர்
வன்களிறாய்ப் பிளிறினர்
அரிமாவாய் முழங்கினர்
அடலேறாய் நிமிர்ந்தனர்
கருவமிக்க மேற்சாதிக்
கயமையை மீறினர்
தெருவிலே நடந்தனர்
செருப்பணிந்து கடந்தனர்

பொருதிட வைக்கத்தில்
புகுந்தநற் பெரியார்தாம்
கருதியது முடிக்குமுன்
காந்தியார் தடையிட்டும்
தெருவிலே நடையிட்டார்;
சிறையிலே அடைபட்டார்;
இருகால்கள் விலங்கிட்டும்
எஃகாக விளங்கிட்டார்!
வரவழைத்து நற்றுணையை
வைக்கத்துப் போராட்டம்
பரபரப்பு ஆக்கினார்;
படும்இழிவை நீக்கினார்!

அண்ணா என்னும்ஓர்
அறிஞரவர் தளபதியாய்
நண்ணியதே பெரியார்க்கு
நல்லெழுச்சி ஆயிற்று!
எண்ணியவை நிறைவேற்ற
எழுத்துரையும்
பேச்சுரையும்
அண்ணாபோல்
ஆகுமா? ஆற்றலர்அவர்பின்னே
எண்ணிலார் எழுந்தனர்;
எங்கங்கும் பரப்பினர்!
திண்ணிய கலைருடன்
திகழ்ந்தபே ராசிரியர்
கண்ணிய நாவலர்
கருத்துரைகள் நிகழ்த்தினர்!
எண்ணிய முடித்திடும்
எழச்சிகொள் தளபதி
கண்ணேந்தும் வீரமணி
கட்டியம் கூறுகின்றார்!
மண்ணேந்தி வீழ்வார்கள்
மதமென்று
வாழ்வோர்கள்!

காலமெலாம் போராடிக்
கடைசிவரை தளராமல்
ஓலமெலாம் போவதற்கு
உரிமைகள் மேவுதற்குச்
சூலமின்றி வாளுமின்றிச்
சுக்குமாந் தடியுமின்றி
வேலுமின்றிக் கருத்துப்போர்
விளைத்தவர்; வெற்றியைச்
சாலவும் கண்டவர்;
சரித்திரம் கொண்டவர்!
நாலுதிசை கொண்டாடும்
நற்பிறந்த நாளின்று!
மேலுமேலும் பிறந்தநாள்
மேவுகவே!
ஞாலமெலாம் பகுத்தறிவு
தன்மான நாயகன்
கோலமே விளங்குகவே!
கொள்கையே வெல்லுகவே!

# குன்னூர் அருகே சிறுத்தை உலா!

ஊட்டி, செப் 17-
குன்னூர் அருகே தேயிலை தோட்டத்தில் உலா வரும் சிறுத்தை வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் வன பகுதிகளில் உள்ள சிறுத்தை, யானை, காட்டுமாடு உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் உணவு தேடி அடிக்கடி ஊருக்குள் புகுவதால் வனவிலங்கு மனித மோதல் ஏற்படுகிறது. மேலும், ஊருக்குள் வரும் சிறுத்தைகள், வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடுவது, மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளை வேட்டையாடுவது வாடிக்கையாக உள்ளது.

இது தவிர தேயிலை தோட்டங்களில் சிறுத்தைகள் மற்றும் காட்டுமாடுகள் நடமாட்டம் இருப்பதால் தொழிலாளர்கள், விவசாயிகள் தேயிலை பறிக்கும் பணிக்கு செல்ல அச்சப்படுகின்றனர். இந்நிலையில், குன்னூர் அருகே கரன்சி பகுதியில் தேயிலை தோட்டம் ஒன்றில் பாறை மீது ஒரு சிறுத்தை நேற்று ஒய்யாரமாக அமர்ந்திருந்தது. அது அங்கும் இங்கும் உலா வந்தது.

# பொருளியல் மேம்பாடும், சமூக மேம்பாடும்!



பொருளாதாரத் துறையில் மேல் வருவதற்குச் சமூகத் துறையில் உள்ள கட்டுப்பாடுகளை உடைக்கச் செய்தால் ஒழிய வேறு வழியில் இந்திய மக்கள் பொருளாதாரத் துறை சீர்படுத்தப்படுமென்பது சிறிதும் முடியாத காரியம் ஆகும்.

பொருளாதாரச் சமத்துவத்தால் சமுதாய பேதாபேதங்கள் அகன்று விடும் என்பது, மேல் நாடுகளுக்குச் சற்றுப் பொருத்தமானதாய் இருக்கலாம். மேல் நாட்டு மக்கள் எல்லோருமே ஒரே மதத்தைத் தழுவியவர்கள் ஆவார்கள். எனவே இயல்பிலேயே அங்கு சமுதாயத்தில் பேதாபேதம் இல்லாமல் இருந்து வருகிறது.

நம் நாட்டு நிலை அப்படி இல்லை. (இங்குப் பிறவியிலேயே பேதாபேதம் கற்பிக்கப்பட்டு, மக்கள் பல சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்.)

**-தந்தை பெரியார்**

## வீ.வடிவேல் தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !

# 43(அ) வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்! 500 நபர்களுக்கு உணவு!

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார் !

சென்னை செப்:17
சென்னை வடக்கு மாவட்டம்
ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட கழக சார்பில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆலோசனைபடி பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னட்டு பாலகிருஷ்ணன் தெரு அருகில் வட்டச் செயலாளர் வீ.வடிவேல் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்க்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அருசுவை உணவுவை ஆர்.கே.நகர் சட்ட மன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் வழங்கினார்.

பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலை வகித்தார்.

இதில் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, பொன்.இளவரசன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம் ஆனந்த், வி.வி.ரமேஷ், ஏ.வெங்கடேஷ், கே.வாசு, சா.திருப்பதிசாமி, சுமன், பி.சதிஷ்குமார், மு.டில்லி துரை, எல்.ரமேஷ், மா.ஜெயசந்திரன், எஸ்.கலா, எ.சிவராஜ், வி.சிவா, எஸ்.முத்தமிழன், எம்.அருண், ஜெ.விஜேஷ், பூங்கோதை, எ.சுரேஷ், ஆர்.சிவக்குமார், என்.வடிவேலன், ஆர்.சிவக்குமார், டி.வீராராகவன், சரத், என்.பார்த்திபன், ஆர்.பழனிசாமி, எஸ்.கே.நந்தகோபால், எஸ்.விமல்நாதன், எஸ்.டில்லிபாபு, ஜெ.விக்னேஷ், பி.குப்புராஜ், பி.வில்வபாலு, ஜெ.பரத்குமார், சி.பிரேம் குமார், கே.குமார், ஆர்.விமல், ஜெ.மகேஷ், ஜெ.சுமதி, ஆர்.ரீதர், கே.எம்.சேகர், கே.ரமேஷ், பாரி, எஸ்.சி.சுரேஷ், நவமணி, எஸ்.கோவிந்தராஜ், மற்றும் இளைஞர் அணி நண்பர்களும் பாகமுகவர்களும், கழக தோழர்களும் கலந்து கொண்டனர்.

## பாலூர் தேவா ஏற்பாட்டில்

# கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணிக் கூட்டம்!

## கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானம்!

கன்னியாகுமரி, செப் 17-
கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் முதல் ஆலோசனைக் கூட்டம் பால்வளத்துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் மனோதங்கராஜ் வழிகாட்டுதலின்படி, அயலக அணி மாநிலத் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் மாநிலச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் ஆலோசனைப்படி மாவட்ட தலைவர் வை நஷீர் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் பாலூர் தேவா முன்னிலையில் நடைபெற்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஓமன் திமுக ஒருங்கிணைப்பாளராக கழகத் தலைவரை சந்தித்து திமுக அயலக அணி, அயலகத் தமிழர் நலவாரியம் அமைக்க வேண்டும் என விண்ணப்பம் அளித்து வேண்டுகோள் வைத்ததை நினைவு கூர்ந்து, தலைவர் அவர்கள் திமுக அயலக அணி அமைத்தது டன் ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே அயலகத் தமிழர் நலவாரியம் அமைத்து ஏழை அயலகத் தொழிலாளர் நெஞ்சமெல்லாம் நிறைந்த கழக தலைவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி பொறுப்பாளர்களாக! தலைவர் ஷா.ஹாறுன்றஸிது (ஏ) நாசீர், அமைப்பாளர் பாலூர் தேவா, துணைத் தலைவி சுனிதா சத்தியராஜ், துணை அமைப்பாளர்கள் தக்கலை ரவி, அதங்கோடு கவாஸ்கர், கீழ்குளம் கிஷோர் ஜெபசிங் மற்றும் ஜான்கிளின் ஆகியோரை அறிவித்த தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நன்றி.

பொறுப்பாளர்களை பரிந்துரை செய்த பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ், அயலக அணி மாநிலத் தலைவர் கலாநிதிமாறன் எம்.பி., செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. ஆகியோருக்கு நன்றி.

கலைஞர் 100 வது ஆண்டு விழாவை நிகழ்ச்சிகள் மூலமாக சிறப்பிப்பது.

அயலக அணி ஒன்றிய, நகர மற்றும் பேரூர் நிர்வாகிகளை ஒன்றியச் செயலாளர்கள் வழிகாட்டுதல்படி அடையாளங் கண்டு மாவட்டச் செயலாளருக்கு பரிந்துரைப்பது.

வெளிநாடுகளில் பணியாற்றுபவர்களின் குடும்பத்தவரை சந்தித்தித்து விபரம் சேகரித்து பதிவு செய்வது என தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

துணை அமைப்பாளர் தக்கலை ரவி வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட துணைத் தலைவி சுனிதா சத்தியராஜ், அதங்கோடு கவாஸ்கர், கீழ்குளம் கிஷோர் ஜெபசிங் மற்றும் ஜான்கிளின் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக மஷ்கட் ஜோஸ் மற்றும் அரிமா சேவியர் கலந்து கொண்டார்கள்.

நிறைவில் துணை அமைப்பாளர் திருமதி. கில்டா மோகன்தாஸ் நன்றி கூறினார்.

## சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர்

# ஜி.எம்.தேவனின் சகோதரி எம்.நீதிதேவி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!



சென்னை, செப்.17-
சென்னை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம். தேவனின் மூத்த சகோதரி எம். நீதி தேவி அவர்கள் நேற்று (16.9.2023-சனிக்கிழமை) மதியம் 12.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 71.

தகவல் அறிந்து ஏராளமான கழக முன்னோடிகளும், நிர்வாகிகளும், தோழர்களும்; அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (17.9.2023-ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு, மூலகொத்தளம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப் படுகிறது.



தமிழ்நாடு அரசின் சார்பில், இராமசாமி படையாட்சியார் அவர்களின் 106வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (16.09.2023) சென்னை, கிண்டி ஹால்டா சந்திப்பு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்.குமார், துணை மேயர் மு.மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# தாம்பரம் மாநகரத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் நிகழ்ச்சி!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், செப். 17-
தாம்பரம் மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 145ஆவது பிறந்தநாள் விழா தாம்பரம் மாநகர செயலாளர் / தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.ராஜா. எம்.எல்.ஏ, தாம்பரம் சானடோரியம் மேம்பாலம் அருகில், வரதராஜா திரையரங்கு எதிரில், இன்று (17/09/2023) காலை 8 மணி அளவில் பெரியார் அவர்களின் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தி உறுதிமொழி ஏற்க உள்ளார்கள்

ஆகையினால் இந்நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர்கள் மாவட்ட மாநகர பகுதி வட்ட நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல குழு, இலக்கிய அணி, தொண்டர் அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி வட்ட நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் தகவல் தொழில்நுட்ப அணி தாம்பரம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அறிக்கையில் கூறியுள்ளார்.

# குட்கா, லாட்டரி விற்ற 44 பேர் கைது!

கிருஷ்ணகிரி, செப். 17-
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குட்கா, லாட்டரி விற்றதாக 44 பேரை போலீசார் கைது செய்தனர். போலீசார் சோதனை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குட்கா, கஞ்சா விற்பனை மற்றும் கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீஸ் சூப்பிரண்டு சரோஜ்குமார் தாக்கூர் போலீசாருக்கு உத்தரவிட்டார். இதையடுத்து மாவட்டம் முழுவதும் அந்தந்த பகுதி போலீசார் தீவிர வாகன சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் போலீசார் கிருஷ்ணகிரி, ஓசூர், காவேரிப்பட்டணம், பர்கூர், மத்தூர், சூளகிரி, வேப்பனப்பள்ளி, கந்திக்குப்பம், ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி, கல்லாவி உள்ளிட்ட பகுதிகளில் மளிகை, பெட்டிக்கடைகளில் சோதனை செய்தனர். அப்போது கடைகளில் குட்கா பதுக்கி விற்ற 44பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் கடைகளில் இருந்து குட்கா பறிமுதல் செய்யப் பட்டன.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டம், அமைந்தகரை மஞ்சகொள்ளை தெருவில் பாதாள சாக்கடை திட்டத்தில் புதிதாக பழுப்பு அமைக்கவும், ஈ.வே.ரா. சாலை மசூதி தெருவில் குடிநீர் பழுப்பு அமைக்கும் பணிகளை அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் துவக்கி வைத்தார். உடன் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், ப.பிரபு, கே.பி.சுரேந்தர், ஓகே.குட்டி மற்றும் 101 (அ) மற்றும் 101 வது வட்டக் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.